1973 நவம்பர் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தந்த மாநில அரசுகளே அங்கங்கே இருக்கும் சிறு சிறுபான்மையோருக்குப் பெரும்பான்மையான உதவிகளை அளித்து வருகின்றார்கள். ஆனால், தொடர்புடைய மொழியைக் கொண்ட மாநிலமும் உதவி அளிக்க வேண்டுமென்பதுதான் இந்தக் கோரிக்கை. ஆகவே, அந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் என்ன என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் நாம் மேற்கொண்டு முடிவு எடுக்க முடியும்.

கல்லூரி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

*** 360 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கல்லூரி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்சி கொடுக்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கல்லூரியில் பயிற்சி அளிக்க நியமிக்கப்படும் ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி. தேர்வு முடிந்தவுடனே வந்துவிடுகிறார்கள். அவர்களுக்குப் போதிய அனுபவம் இல்லாததால் மாணவர்களுக்குச் சரியான முறையில் கல்வி கற்றுக்கொடுப்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே, அவர் களுக்குக் குறைந்தது ஓராண்டாவது பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவர முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவொரு திட்டம் இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனால், அப்படிப்பட்டவொரு திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஒரு செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். அரசு அதுபற்றி பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. அந்தக் கருத்தை ஓரளவு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கருத்துகூட தெரிவித்திருக்கிறேன். ஆனால், அதற்கான செலவு வகைகளைப் பார்த்தால் ஒரு எட்டு லட்சம் சில்லறை ரூபாய் ஆகிறது. ஆகவே

தான் இந்த ஆண்டு நிதி நிலையைப் பொறுத்த வரையிலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை; தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. மறு படியும் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பணி யாற்றுகின்ற ஆசிரியர்களைப் பொறுத்து, அவர்கள் டாக்டரேட் போன்ற உயர்பட்டங்களைப் பெற்றிருக்கிறவர்களாக இருந்தால் அவர்களுக்கு இன்ஸென்டிவ் பே கொடுக்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

Grants to Sanskrit College

* 361 *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have sanctioned any grants to the Madras Sanksrit College in Royapettah High Road, Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof for the last five years?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர் களே,

(அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட முறைகளில் மானியம் அளிக்கப்பட்டிருக் கிறது :—

1967-68-ம் ஆண்டில் ரூ. 7,410-ம், 1968-69-ம் ஆண்டில் ரூ. 7,220-ம், 1969-70-ம் ஆண்டில் ரூ. 7,871-ம், 1970-71-ம் ஆண்டில் ரூ. 11,688-ம், 1971-72-ம் ஆண்டில் ரூ. 17,510-ம் மானியமாக அளிக்கப்பட்டது.

National Homoeopathy Institute

* 362 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a National Homoeopathy Institute in this State with Central assistance; and

(*b*) if so, the details thereof?